# செந்தமிழ்

தொகுதி : 94 பிப்ரவரி 2000 பகுதி : 2

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் *மா. தனுக்கோடி பாண்டியன்* பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

## தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம். பி. ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே. எஸ். டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க. சி. அகமுடை நம்பி | உறுப்பினர் |
| திரு. எஸ். பரங்குன்றம் | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பேரறிஞர். | நா. பாலுசாமி (ஆசிரியர்) |
| பேரறிஞர். | தமிழண்ணல் |
| பேரறிஞர். | செ. கந்தசாமி |
| டாக்டர். | என். சேதுராமன் |
| பேரறிஞர். | ம. ரா. போ. குருசாமி |
| பேரறிஞர். | சி. கதிர் மகாதேவன் |
| பேரறிஞர். | கு. துரைராசு |
| பேரறிஞர். | அ. அ. மணவாளன் |
| பெரும்புலவர். | இரா. இளங்குமரன் |
| பேரறிஞர். | அ. தட்சிணாமூர்த்தி |
| பேரறிஞர். | எஸ். எம். கமால் |
| பேரறிஞர். | ஈ. கி. இராமசாமி |
| பேராசிரியர். | சே. அரிராமநாதன் |
| பேரறிஞர். | அ. மா. பரிமணம் |

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் *மா. தனுக்கோடி பாண்டியன்* பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

## பொருளடக்கம்


1. எல்லோருக்கும் தொல்காப்பியம் ... 39
- *பேரறிஞர்* நா. பாலுசாமி

3. முல்லை நில உயிர்ச்சூழல் ... 55
- *பொறியியல் வல்லுநர்*
க.சி.அகமுடை நம்பி, பி.இ., எம்.ஏ.,

4. நூல் மதிப்பீடு - மோஹன் ராகேஷ் ... 68
- *பேரறிஞர்* ப. பழனியம்மாள்.

5. இலக்கணக் கொள்கைகளும் தெ.பொ.மீயின் பார்வையும் ... 71
- *பேரறிஞர்* செ. வை. சண்முகம்

- *பேரறிஞர் நா.பாலுசாமி*

*(முன்னிதழ்த் தொடர்ச்சி)*

**சூத்திரம் 437:**

*தன்மேல் செஞ்சொல் வரூஉம் காலை*
*நிகழும் காலமொடு வாராக் காலமும்*
*இறந்த காலமொடு வாராக் காலமும்*
*மயங்குதல் வரையார் முறைநிலை யான*

*(பொ-ரை)* உம்மை எச்சத்தின் முன் செஞ்சொல் வந்தால்

நிகழ்காலமும் எதிர்காலமும் மயுங்கும்; இறந்தகாலமும் எதிர்காலமும் மயங்கும் - இது இலக்கண வழுவாயினும் வழுவமைதியாகக் கொள்வது இலக்கண நெறியாகும். தன்மேல் - எச்ச உம்மை; செஞ்சொல் - உம்மை இல்லாத சொல். வாராக் காலம் - எதிர்காலம் அல்லது வருங்காலம். மயங்குதல் - விரவி (கலந்து) வருதல்

*(எ-டு)* அ) கூழ் உண்ணா நின்றான் சோறும் உண்பான் - -இதில் கூழ் உண்ணாநின்றான் என்பது செஞ்சொல்; சோறும் உண்பான் - உம்மை எச்சம். நிகழ்காலமும் எதிர்காலமும் மயங்கின; வழுவமைதி.

ஆ) கூழ் உண்டான் சோறும் உண்டான் - இங்கு இறந்த காலமும் எதிர்காலமும் மயங்கின வழுவமைதி. இதனால் எதிர்காலம் முன் நிற்ப அதனோடு பிறகாலங்கள் வந்து மயங்குவதில்லை என்பது பெறப்படும்.

## சூத்திரம் 438 :

(என-எச்சம்)

*எனவென் எச்சம் வினையொடு முடிமே.*

*(பொ-ரை)* என என்னும் எச்சம் வினை கொண்டு முடியும். கொள் **எனக்** கொடுத்தான், ஒல்**லென** ஒலித்தது. இங்கு 'என' எச்சம் முறையே கொடுத்தான், ஒலித்தது என்னும் வினைமுற்றுகள் கொண்டு முடிந்தமை காண்க.

## சூத்திரம் 439:

(பிறமூவெச்சங்கள்)

*எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்*
*எஞ்சுபொருள் கிளவி இலவென மொழிப.*

*(பொ-ரை)* மேலே கூறப்பட்ட எச்சங்கள் ஒழிந்த சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசைஎச்சம் ஆகிய மூன்றும் தம்மை மேல் வந்து முடிக்கும் எச்சப்பொருள்தரும் சொற்கள் கொண்டு முடிவன அல்ல என்று கூறுவர் இலக்கணப்புலவர். எஞ்சுபொருள்கிளவி - எஞ்சிநின்று வந்துமுடிக்கும் சொல்.

பிரிநிலை எச்சம் முதலிய ஏழு எச்சங்களும் தாம் பிறசொற்களைக் கொண்டுமுடியும். இங்குக் கூறப்படும் சொல்லெச்சம் முதலிய மூன்றும் தாம் பிறவற்றிற்கு முடிபாக. வரும். விளக்கம் பின்வரும் சூத்திரங்களில் **காணலாம்.**

## சூத்திரம் 440 :

(குறிப்பும் இசையும்)

*அவைதாம்*

*தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும்*

*(பொ-ரை)* இவ்விரண்டும், அஃதாவது குறிப்பெச்சமும் இசை எச்சமும் கூறுவோர் மனக்கருத்தின்படி எஞ்சி நிற்கும் பொருளைப் புலப்படுத்தும். முடிக்கும் சொற்கள் வாரா.

*(எ-டு)* *அ) "இளைதாக முள்மரம் கொல்க களையுநர்*
*கைகொல்லும் காழ்த்த இடத்து"*

முள்மரம் செடியாக வளரும்போதே களையப்படல் வேண்டும்; முற்றி மரமானபின் அதனைக் களைவது மிகவும் கடினம்; கோடரி கொண்டுதான் வெட்டிச் சாய்த்தல் வேண்டும். இதுவே இக்குறளின் பொருள். இதனால் பெறப்படுவது, பகைவரை முளையிலேயே அழிக்கவேண்டும் ; வளரவிடல்கூடாது என்னும் குறிப்புப்பொருள் ஆகும். இது குறிப்பெச்சம். குறிப்பு - கருதியபொருள்.

*(ஆ) "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு".*

எழுத்துக்கள் எல்லாம் அகர ஒலியை முதலாகக் கொண்டவை; (அதுபோல) உலகம் பகவானை முதலாக உடையது. இக்குறளில் உவமஉருபாகிய அதுபோல என்னும் சொற்றொடர் (இருசொற்கள்) வருவிக்கப்படுகிறது. இத்தொடர் எஞ்சிநிற்பதாம். இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் (இசைகள்) எஞ்சிநிற்பின் இசைஎச்சமாம்.

**ஒருவிளக்கம் :**

குறிப்பெச்சம் என்பது ஒருவாக்கியமே. எஞ்சிநின்று ஒரு முழுப்பொருளைக் குறிப்பால் உணர்த்துவது; இசைஎச்சம் பாட்டில் பொருள்கொள்ளும்போது ஒன்றுக்குமேற்பட்ட சொற்களை (இசைகளை) வருவித்துப் பொருள்கொள்ள நேரிடின் அவை இசை எச்சம் எனப்படும். ( இசை - ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இசைந்து, இயைந்து சென்று தொடராவது). சொல்லெச்சம் என்பது ஒரு சொல்மட்டில் எஞ்சிநிற்பது. இவ்வாறு மூன்றினுக்கும் உள்ள வேறுபாட்டைக் காண்க.

## சூத்திரம் 441:

(சொல்லெச்சம்)

*சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்*

*சொல்லளவு அல்லது எஞ்சுதல் இன்றே*

*(பொ-ரை)* சொல்லெச்சம் ஒரு சொல்லுக்குப் பாட்டில் முன்னும் பின்னும் ஒருசொல்மாத்திரம் எஞ்சும்; தொடராக எஞ்சாது

*(எ-டு)* *"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*

*இறைவனடி சேரா தார்.*

பிறவிக் கடலை இறைவனடி சேராதார் நீந்தார்; நீந்துவோர் யார்? இறைவனடி சேர்ந்தார். சேர்ந்தார் என்பது வருவிக்கப்பட்டது. இவ்வாறு ஒரு சொல் எஞ்சி நிற்பின் அது சொல்லெச்சம்.

## சூத்திரம் 442 :

(மரபு வகைகள்)

(இடக்கர் அடக்கல்)

*அவை அல் கிளவி மறைத்தனர் கிளத்தல்*

*(பொ-ரை)* ஓர் அவையுள் சொல்லத்தகாத சொல்லை, அப்பொருள்படும் மற்றொரு அருவருப்பில்லாத சொல்லால் சொல்லுக என்பதாம். அவை அல்- சபையில் கூறக்கூடாத, மறைத்தனர் - மறைத்து, நாகரிகமாக.

*(எ-டு)* மலம்கழுவி வருவோன் ஒருவன் கால்கழுவி வருவதாகக் கூறுவது நாகரிகம். இதனை இடக்கர் அடக்கல் என்பர். இடக்கர் - இடக்கரான (கொச்சையான்) சொல். அடக்கர் - அடக்கிப் பேசுதல், மறைத்துப் பேசுதல்.

## சூத்திரம் 443 :

*மறைக்கும் காலை மரீஇயது ஒராஅல்*

*(பொ-ரை)* சபையில் கூறத்தகாத சொற்களை மறைத்துக்கூறும் போது, தொன்றுதொட்டு வழங்கிவருவன மறைக்கப்படா. ஒராஅல் - (அளபெடை) ஒருவு என்பது ஓரால் என எதிர்மறையாய் நின்றது. ஓரால் - நீங்கா; மறைக்கப்படா.

*(எ-டு)* ஆப்பீ (ஆட்டுப்பிழுக்கை) ஆனையிலண்டம் என மருவி வந்தன அமைக்கப்படும் என்பதாம், "மயிர் நீப்பின்" என்னும் தொடரில் 'மயிர்' என்பது மருவி வழக்காகிவிட்டதால் கொள்க என்பதாம்.

## சூத்திரம் 444 :

(ஈ, தா, கொடு)

*ஈதா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்*
*இரவின் கிளவி ஆகிடன் உடைய.*

*(பொ-ரை)* ஈ, தா, கொடு என்னும் மூன்று சொற்களும் ஒருவன் மற்றொருவனிடம் யாசித்தலின்போது பயன் படுத்தப்படுவனவாம். யாசிக்கும் குறிப்பு வெளிப்படுத்தாதபோது இம்மூன்று சொற்களும் வேறுபொருள் தருதலும் உண்டு. வழங்கல், உதவுதல், கொடுத்தல் முதலியன கொடை (வள்ளல் தன்மை) உணர்த்துமே அன்றி யாசித்தல் பொருள் தாரா. எனவே மேற்கண்ட மூன்றை மட்டும் தொல்காப்பியர் குறிப்பிட்டுக் கூறினார்.

## சூத்திரம் 445:

(ஈ - என்பது)

*அவற்றுள்*
*ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே*

### சூத்திரம் 446:

(தா - என்பது)

*தாவென் கிளவி ஒப்போன் கூற்றே*

*(கொடு - என்பது)*

### சூத்திரம் 447:

*கொடுவென் கிளவி உயர்ந்தோன் மேற்றே.*

*(பொ-ரை)* யாசிப்போன் ஒருவன் யாசிக்கும்போது ஒருபொருளை 'ஈ'எனக் கூறி யாசித்தலும், யாசிப்போனும், யாசிக்கப்படுவோனும் ஒத்தநிலையில் இருப்பின் 'தா' எனக்கூறியும், கேட்போன் கேட்கப்படுபவனைவிட உயர்ந்த நிலையில் இருப்பின் கொடு என்று கூறியும் இரத்தல் வேண்டும் என்பது இலக்கண மரபு.

*(எ-டு)* பசித்தவன் சோறு 'ஈ' (இடுக) என்றும், ஒத்தவன் ஆடை ஒன்று 'தா' என்றும், உயர்ந்தவன் சந்தானம் 'கொடு' எனவும் கூறவேண்டும்.

### சூத்திரம் 448 :

(சிறப்பு விதி)

*கொடுவென் கிளவி படர்க்கை ஆயினும்*

*தன்னைப் பிறன்போல் கூறும் குறிப்பில்*

*தன்னிடத்து இயலும் என்மனார் புலவர்.*

*(பொ-ரை)* 'கொடு' என்பது படர்க்கைச்சொல். (கிளவியாக்கம் சூத்.30) ஆயினும் கூறுகின்ற ஒருவன் தன்னைப் பிறன்போல் வைத்துக்கூறும் குறிப்பினால், தன்மை இடத்தில் வழங்கும் என்பர். எடுத்துக்காட்டுகள் மேலே தரப்பட்டன.

## சூத்திரம் 449

(பெயர்கள் முதலியவை)

*பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்*

*திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்*

*தொல்நெறி மொழிவயின் ஆஅ குநவும்*
*மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்*
*மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்*
*அன்றி அனைத்தும் கடப்பாடு இலவே.*

*(ப-ரை)* பெயர்நிலைக் கிளவியின் - பெயரியற் சொற்களாக நின்று, ஆஅகுவும் - குறிப்புப் பொருள் தோன்றவருவனவும், திசைநிலைக் கிளவியின் - திசைச்சொற்களாக நின்று குறிப்புப் பொருள் உணர்த்துவனவும், தொல்நெறி மொழியின் - பழமையான மரபு பற்றி வரும் சொற்களிடமாகத் தோன்றுவனவும், மெய்ந்நிலை மயக்கின் - சொற்கள் வடிவம் மாறிக் குறிப்புப் பொருள் உணர்த்துவனவும், மந்திரப்பொருளை உணர்த்திவருவனவும், அன்றி அனைத்தும் - இவையே அன்றி இவைபோன்று வரும் பிறசொற்களும் எவ்வகையான இலக்கண வரம்பும் இன்றி வரும் குறிப்புச் சொற்களாம்.

*(வி-ரை)* ஆஅகுந - ஆகிவரும் சொற்கள்; (அளபடை) மெய்ந்நிலை - சொற்களின் அமைப்பு வடிவம். மயக்கம் - மாறி வருதல். மந்திரம் - சான்றோரும் அருளாளரும் அருளும் சக்தி வாய்ந்த சொற்கள். தொல்நெறி - தொன்றுதொட்டு வழங்கி வரும் முறை.

*(எ-டு)* 1) ஓலை - இச்சொல் பனை ஓலை முதலிய ஓலைகளைக் குறிக்காமல் முடங்கல் (கடிதம்) என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்தும் பெயர்ச்சொல். இது பெயரின் அடிப்படையில்

தோன்றும் குறிப்புமொழி. ஓலை அனுப்பினான் என்னும் வழக்குள்ளமை அறிக. ஒரு காளையை வளர்ப்போன் அதனை நம்பி (சிறந்த ஆண்மகன்) என்று அழைப்பதும் இதன்பால்படும். இது மங்கலமாகக் கூறுதலாம்.

2) திசைச்சொல் - புலியான், பூசையான் போலவருவன. இனிக் 'கள்' என்பதனைச் 'சொல்விளம்பி' என்பதும் திசைச் சொல்லடியாகப் பிறந்ததாம். இது குழூஉக்குறி எனவும் கூறப்படும்.

3) தொன்னெறி மொழி - முதுமொழி (எ-டு) கறுப்புச் சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன் - இத்தொடர் உயர்திணையில் காவல்காரனை உணர்த்தினாலும் குறிப்பாகப் ''பூட்டை'' உணர்த்தும். இது விடுகதை எனவும் படும்.

4) மெய்ந்நிலை மயக்கின் வருநவும் - (எ-டு) வஞ்சியான் என்பது வஞ்சிக்காதவன் என்னும் இயற்பொருள் தருவதுடன் வஞ்சி சூடி பகைமேல் செல்வோனையும், வஞ்சிநகரின் தலைவனையும் குறித்து வருவன காண்க. மெய்நிலை - உண்மைப் பொருள். சொற்கள் தத்தம் பொருளை இழந்து தொடராக நின்று ஒரு குறிப்புப் பொருளை உணர்த்துவதும் இதனுள் அடங்கும்.

5) மந்திரப் பொருள் - நிறைமொழி மாந்தர் (ஞானிகள்) ஆணையே மந்திரம். நமசிவாய, ஓம் என்பன போன்றவை.

இவை எல்லாம் மரபு காத்தலின்பால்படும் என அறிக.

## சூத்திரம் 450:

*செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்*
*செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே.*

*(பொ-ரை)* செய்யாய் என்னும் வாய்பாட்டு முன்னிலை வினைமுற்று 'ஆய்' என்னும் விகுதி கெடச் 'செய்' என்னும் உடன்பாட்டு வினைமுற்றாகவும் நிற்கும்.

*(எ-டு)* செய்யாய் - இது எதிர்மறையாயின் செய்ய மாட்டாய் என்னும் பொருள் உணர்த்தும்; செய்வாயாக என்று வியங்கோள்வினைமுற்றாக நின்று உடன்பாட்டையும் உணர்த்தும். இதன் இறுதியில் 'ஆய்' என்னும் விகுதி உள்ளது.

உண்ணாய், தின்னாய், நில்லாய், நடவாய் என்பன ஈற்றில் உள்ள 'ஆய்' கெட, உண், தின், நில், நட என் 'செய்' என்னும் வாய்பாட்டு முன்னிலை உடன்பாட்டு முற்றாகவும் வரும் தன்மையுடையது. செய்யாய் என்னும் வாய்ப்பாட்டு வினை என்பது இச்சூத்திரப் பொருளாம்.

## சூத்திரம் 451:

(முன்னிலை ஈறுகள்)

*முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்*
*அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.*

*(பொ-ரை)* முன்னிலை வினைமுற்றின் முன்வரும் 'ஈ' என்பதும், 'ஏ' என்பதும், அம்முன்னிலை முற்றுகளுக்கு ஏற்ற மெய்யெழுத்துக்களின்மேல் ஏறிவரும்.

*(எ-டு)* அ) 'சென்றீ பெரும' - செல் + ற் + ஈ = சென்றீ. செல் - பகுதி ; ஈ - விகுதி, ற் - எழுத்துப்பேறு இங்கு 'ஈ' என்பது 'ற்' என்னும் றகர மெய்யூர்ந்து நின்றது.

ஆ) 'தொட்டனை நின்மே' - நில் + ம் + ஏ = நின்மே (நிற்க) இங்கு 'ஏ' காரம் 'ம்' ஏறி நின்றது.

ஏகாரம் மகரம் ஊர்ந்தே வரும்; பிற மெய்களின்மேல் வாராது.

**சூத்திரம் 452:**

*கடிசொல் இல்லைக் காலத்துப் படினே.*

*(பொ-ரை)* ஒவ்வொரு காலக்கட்டத்தில் சில சொற்கள் வழங்கி வருமானால், அவை வழிவழி வந்தன அல்ல என்று தள்ளிவிடமுடியாது; ஏற்றுக்கொள்க என்பதாம்.

*(எ-டு)* சட்டி, சள்ளை, சம்பு, சமழ்ப்பு என்பன போன்றவை

தொல்காப்பிய இலக்கணப்படி சகரம் மொழிக்கு முதலில் வாராது; எனினும் காலத்தால் வழக்குப் பெற்றமையால் அவற்றையும் கொள்க என்பதாம். இச்சொற்கள் தொல்காப்பியத்துக்குப் பிற்பட்டவை.

(சள்ளை - தொந்தரவு; சம்பு - எலுமிச்சை, நாவல்; சமழ்ப்பு - வெட்கம்)

**சூத்திரம் 453:**

*குறைச்சொற் கிளவி குறைக்கும் வழி அறிதல்*

*(பொ-ரை)* குறைக்கும் சொற்களைக் குறைக்க வேண்டும் இடம் தெரிந்து குறைத்தல் வேண்டும்.

*(எ-டு)* தாமரை - 'மரை இதழ்'. இங்கு 'தா' என்னும் முதல் எழுத்துக்குறைந்தது. முதற்குறை விகாரம் ; ஓந்தி என்பது ஓதி (ஓணான்) என இடை எழுத்துக் குறைந்து வந்தது. இடைக்குறை விகாரம். நீலம் என்பது 'நீல்' என நின்று கடைக்குறை விகாரமாய் வந்தது.

இவ்வாறு சில சொற்கள் முழுமையாக இல்லாமல் முதலிலும் இடையிலும் கடையிலும் சில எழுத்துக்கள் குறைந்து வந்தாலும், பொருள் மாறாது நிற்கும்.

**சூத்திரம் 454:**

*குறைந்தன ஆயினும் நிறைப்பெயர் இயல.*

*(பொ-ரை)* சொற்கள் மூவிடத்தும் எழுத்துக்கள் குறைந்து வந்தாலும் நிறைந்து நிற்கும் சொற்களாகவே கொள்க என்பதாம்.

**சூத்திரம் 455:**

*(பொ-ரை)* **இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே.**

இடைச்சொற்கள் எல்லாம் வேற்றுமை உருபுகள் போன்றவையாம். உருபுகளும் இடைச்சொற்களே. இவ்விருவகையினவும் தனித்து நின்று பொருள்தாரா. பெயர் வினைகளோடு சேர்ந்தே பொருள்தரும். சொல் இருவகைப்படும். ஒன்று, பிறிதொரு சொல்லை வேறுபடுத்துவது;; மற்றொன்று பிறிது ஒரு சொல்லால் வேறுபடுத்தப்படுவது. இவ் ஈரியல்புகளும் சொல்லுக்கு உண்டு. இப்பொது விதி இச்சூத்திரத்தால் பெறப்படுகிறது.

வேற்றுமை உருபுகள் பெயர்ச்சொற்களைப் பொருள்வேறுபடச் செய்யும். (எ-டு) கந்தன் வந்தான் என்னும் தொடரில் கந்தன் வருதல் தொழில் செய்யும் கருத்தா; கந்தனைக் கண்டேன் என்னும் தொடரில் 'ஐ' என்னும் இரண்டன் உருபு சேர்ந்து அவனைக் காணப்படும் (செய்யப்படும்) பொருளாக மாற்றிவிடுகிறது. இவ்வாறே பிற உருபுசேர்ந்து அவனைக் காணப்படும் (செய்யப்படும்) பொருளாக மாற்றிவிடுகிறது. இவ்வாறே பிற உருபுகளும் செய்யும்.

இதுபோலவே கேள் என்பது பெயராக நிற்பின் (உறவினர்) என்னும் பொருள்தரும். இதனுடன் 'மதி' என்னும் இடைச்சொல் சேர்ந்து 'கேண்மதி' என வரும்போது முன்னிலை வினைச்சொல்லாக மாறிவிடுகிறது. இதுவே இச்சூத்திரப் பொருளாம்.

## சூத்திரம் 456:

*உரிச்சொல் மருங்கிலும் உரியவை உரிய*

*(பொ-ரை)* உரிச்சொற்களுள்ளும் வேறுபடுத்தும் சொற்கள் சில உள்ளன. எல்லா உரிச்சொற்களும் அவ்வாறு வேறுபடுத்துவன அல்ல. இவையும் வேறுபடுத்தும் உரிகள், வேறுபடுத்தப்படும் உரிகள் என உரிச்சொற்களும். இருவகை இயல்பின என்பதாம்.

*(எ-டு)* உறு, தவ, நனி - இவைபோல்வன வேறுபடுக்கும் உரிச்சொற்கள். உறுபொருள், தவப்பெரிது, நனிபேதை என வேறுபடுக்கும் விதம் அறிக.

இனி, குரு, கெழு, செல்லல், இன்னல் என்பன போன்றவை இருநிலையும் உடையவை. அஃதாவது இவை வேறுபடுத்தும், வேறுபடுக்கப்பட்டும் வருபவை.

குருமணி, விளங்கு குரு என முன்னது வேறு படுத்தும் (விசேடித்தும்) பின்னது வேறுபடுத்தப் பட்டும் (விசேடிக்கப்படும்) வந்தவாறு காண்க. பிறவும் அவ்வாறே.

## சூத்திரம் 457:

*வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய*

*(பொ-ரை)* மேலே கூறப்பட்ட வினையெச்சமும் வேறுபட்ட பல இயல்புகளை உடையனவாம்.

*(எ-டு)* ஞாயிறு பட்டு (மறைய) வந்தான் - இத்தொடரில் 'பட்டு' என்பது 'செய்து' என்னும் எச்சம் தன் வினைமுதல் (கருத்தா) கொள்ளாமல் பிறிதின் வினையைக் கொள்ளுதலும் அஃது ஈற்றெழுத்து(டு) 'ட' எனத்திரிதலும்,

கண்ணியன் வில்லன் வரும் - இத்தொடரில் 'கண்ணியன்' என்னும் குறிப்புமுற்று. 'கண்ணியனாய்' எனச் சொல்லின் திரிபாய் (எச்சமாய்) வருதலும் ஆக வினையெச்சமும் வெவ்வேறு வடிவங்களாகத் திரியும் என்பது கூறப்பட்டது

## சூத்திரம் 458:

*உரையிடத்து இயலும் உடன்நிலை அறிதல்*

*(பொ-ரை)* வழக்கில் உடன் நிற்க இயலாத ஒன்றினை உடன்நிகழ்ந்ததாகக் கொள்க.

*(எ-டு)* இந்த நாழிக்கு இ.ந்த நாழி சிறிது பெரிது - இத்தொடரில் சிறிது, பெரிது என்பன முரண்பட்டவை. சேர்ந்து வரஇயலாத ஒரு தொடர். ஆயினும் சிறிது என்பது 'பெரிது' என்பதனை விசேடித்து நிற்கிறது. அஃதாவது 'மிகப்பெரிது' அன்று என்னும் பொருளை அது தருகிறது. இவ்வாறு வருவனவற்றை முரண் என்று கருதி வழுவாகக் கொள்ளல் கூடாது. அமைத்துக்கொள்க என்பது கருத்து (உரை-உலகவழக்கு) (உடன் நிலை - உடன்சேர்ந்து நிற்றல்).

## சூத்திரம் 459:

(குறிப்பால் உணரப்படுபவை)

*முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே*
*இன்ன என்னும் சொன்முறை யான.*

*(பொ-ரை)* சொல்லால் மட்டும் அல்லாமல் சொல்வோன் குறிப்பால் பொருள் உணரப்படும் சொற்களும் உள; இஃது இப்பொருள் இன்ன இயல்பினது என்று சொல்லும்போது கொள்ளப்படும்.

முன்னம் - குறிப்பு; இன்ன - இத்தகையன. சொல்முறை - சொல்லுமிடத்து

(எ-டு) உவர்க்கடல் போன்ற செல்வர் - இத்தொடர் கூறுவோன் குறிப்பால்

(அ) பயன்படாத செல்வர் (உலோபி) என்னும் பொருளைத் தரும்.

ஆ) குழை கொண்டு கோழி எறியும் வாழ்க்கையர் - இத்தொடர் அத்தகைய பெரும் செல்வம் உடையவர்கள் என்பதனைக் குறிப்பால் உணர்த்தும்.

## சூத்திரம் 460:

*(இரண்டு சொற்கள் ஒரே பொருளை உணர்த்தல்)*
*ஒருபொருள் இருசொல் பிரிவில வரையார்*

(பொ-ரை) பொருள்வேறுபாடு இல்லாமல் ஒரே பொருளைத் தரும் இரண்டு சொற்கள் பிரிவில்லாமல் தொடர்ந்துவந்தால், அவற்றை நீக்கமாட்டார். வரையார் - நீக்கார். பிரிவில - தொடர்ந்து.

(எ-டு) மீமிசை - ஒருபொருள் இருசொல். மீ - மேலே மிசை-மேலே. மிகுந்த உயரம் என்பது பொருள். இங்கு மீ, மிசை இவற்றைப் பிரித்துப் பொருள்கொள்ளல் கூடாது.

ஆ) கழிபெரும்கடல் - கழி, பெரும் இரண்டும் மிகுந்த அல்லது பெரிய என்னும் பொருளுடையன. மிகப் பெரிய கடல் என்பது உணர்த்தப்படுகிறது.

## சூத்திரம் 461 :

*ஒருமை சுட்டிய பெயர் நிலைக்கிளவி*
*பன்மைக்கு ஆகும் இடனுமார் உண்டே.*

(பொ-ரை) ஒருமைப் பெயர்ச்சொல் பன்மைக்கு வரும் இடமும் உண்டு.

(எ-டு) ஏவல் இளையர் தாய் வயிறு கரிப்ப - இத்தொடரில் தாய் ஒருமைகுறித்த பெயர்; பன்மை - தாயர் (தாய்மார்கள்) 'இளையர்' என்பது 'அர்' விகுதிபெற்ற

பன்மைப்பெயர். இதற்கு ஏற்பத் தாயர் என்று இருத்தல் வேண்டும். ஆனால் தாய் என ஒருமையில் இருப்பினும் 'இளையர்' என்பதனால் 'தாயர்' எனப் பன்மையாகக் கொள்க என்பதாம். இஃது உயர்திணையிடத்தில்தான் வரும்.

**சூத்திரம் 462 :**

(ஆற்றுப்படையில்)

*முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி*
*பன்மையொடு முடியினும் வரைநிலை இன்றே*
*ஆற்றுப்படை மருங்கில் போற்றல் வேண்டும்*

*(பொ-ரை)* முன்னிலை ஒருமைச்சொல் பன்மை வினையால் முடிந்தாலும் நீக்கப்படாது. அவ்வாறு கொள்வது ஆற்றுப்படைச் செய்யுளில் எனக்கொள்க.

*(எ-டு)* ஒக்கல் தலைவ... பதம் மிகப் பெறுகுவீர் (மலைபடு) - இவ்வாற்றுப்படைச் செய்யுள் அடியில் தலைவ என முன்னிலை ஒருமையில் விளித்துப் பெறுகுவீர் எனப் பன்மை வினையில் முடிக்கிறார் ஆசிரியர். தலைவ முன்னிலை ஒருமைப் பெயர். பெறுகுவீர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று. ஆற்றுப்படை - ஒரு புறத்துறை; ஒருவரை வழிகூறி அனுப்புதல்.

**சூத்திரம் 463:** (புறனடைச் சூத்திரம்)

*செய்யுள் மருங்கிலும் வழக்கியல் மருங்கிலும்*
*மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்*
*பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது*
*சொல்வரைந்து அறியப் பிரித்தனர் காட்டல்.*

*(பொ-ரை)* நாடக வழக்கத்திலும் பொருள்புலப்படக் கூறப்பட்ட சொற்களை எல்லாம், பலவாக வேறுபட்ட

விதிகளால் இலக்கண நெறிமுறை பிறழாமல், சொல்லுகின்றவர் அவற்றை வரையறைப்படுத்தி உணருமாறு பிரித்து எடுத்துக்காட்டல் வேண்டும்.

செய்யுள் மருங்கு - நாடக வழக்கு, இலக்கிய வழக்கு, வழக்கியல் மருங்கு - உலகியல் வழக்கு, உலக நடப்பு. கிளவி - கூறப்பட்ட சொற்கள். செய்தியின் - விதிமுறையால், இலக்கண விதிகளால். நூல் - இலக்கண நூல். வரைந்து - முறைப்படுத்தி. பிரித்தனர் காட்டல் - பிரித்து உணர்த்துதல்.

*(எ-டு)* யானும் நீயும் அவனும் செல்வேம் - இத்தொடரில்,

அ) யான் - தன்மை, நீ - முன்னிலை, அவன் - படர்க்கை, செல்வேம் - தன்மைப் பன்மை வினைமுற்று, அஃதாவது ஏனைய இடங்களுக்கு உரிய சொற்கள் (நீ, அவன்) தன்மைச் சொல்லோடு (யான்) இயையுமேல், தன்மைவினையால் முடியும்.

ஆ) அவனும் நீயும் சென்மின் - இதில் அவன் - படர்க்கை, நீ - முன்னிலை, சென்மின் - முன்னிலை வினைமுற்று, இங்குப்படர்க்கைச் சொல் முன்னிலையோடு இயைந்ததால் முன்னிலை வினையால் முடிந்தது. இவ்வாறு இடம்நோக்கிப் பிறவற்றையும் பிரித்து அறிக என்பதாம்.

(எச்சவியல் முற்றிற்று)

## சொல்லதிகாரம் முற்றிற்று

# முல்லை நில உயிர்ச்சூழல்

பொறியியல் வல்லுநர், **க.சி.அகமுடை நம்பி,** பி.இ., எம்.ஏ.,

## முன்னுரை

இந்த உலகக்கோளில் வாழுகின்ற உயிரினங்கள் யாவும் இயல்பாக வாழ்வதற்கு ஏதுவாக அமைகின்ற சூழலை உயிர்ச்சூழல் அமைப்பு (Eco System) என்று கூறுகிறோம். இந்த அமைப்பில், உயிரினங்களின் உயிர்ப்புத்தன்மை, நிலம், நீர், காற்று, விண்வெளி, ஞாயிற்றொளி போன்ற புறச்சூழல் நிலைகளைப் பொறுத்து அமைகிறது.

மனிதனுடைய வாழ்வு இயற்கையோடு இயற்கையாக அமைந்திருந்த காலம் வரை உயிர்ச்சூழல் சீராகவும் விளங்கியது. உயிர்ச்சூழலுக்கு எந்த ஒரு கேடும் வந்ததில்லை. உயிரினங்கள் உரிமையுடனும் உவகையுடனும் வாழ்ந்துவந்தன. அத்தகைய உரிமை வாழ்வில் மனிதனுக்குக் கிடைத்திட்ட மகிழ்ச்சி, மன அமைதி, மன எழுச்சி ஆகியவற்றை இன்றைய நாகரீக மனிதன் பெறமுடிவதில்லை. ஏன்? இன்றைய மனிதனின் பேராசை, மற்ற உயிரினங்களெல்லாம் தன்னுடைய தேவைகளுக்கே படைக்கப்பட்டவை என்று கொள்கிற அவனது மனப்பான்மை, இயற்கை வளங்களை அளவுக்கு அதிகமாகச் சுரண்டிப் பயன்படுத்திக்கொள்கின்ற அவனது 'தான்தோன்றித் தனம்', இயற்கையின் விதிகளைத் தொடர்ந்து மீறி வருகின்ற அவனது பொறுப்பற்ற செயல்பாடுகள் போன்ற காரணங்களால் உயிர்ச்சூழலின் சமச்சீர் நிலைமை சீர்குலைந்து வருகிறது.

இந்தச் சீரழிவுக்குப் பின்னணியாக இருப்பது, உலக மக்கள்தொகை அளவுக்கு அதிகமாகப் பெருகிக் கொண்டிருப்பதுதான். குறிப்பாக, இந்தியா போன்ற வளரும்

நாடுகளால் மிகையான மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நாளும் பெருகிவரும் மக்கள் பெருக்கத்தால், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உரிய இயற்கை வளங்கள் குறைந்து கொண்டு போவது தவிர்க்க முடியாதது. மனிதத்தேவையின் அழுத்தம் அதிகமாகிவிட்ட இன்றைய நிலையில், உயிர்ச்சூழலைச் சீராக்கிக் கொள்ள இயலுமா என்ற ஐயப்பாடு சுற்றுச்சூழலியலாளர்களுக்குப் பெரும் கவலையளிப்பதாக உருவாகியுள்ளது.

## பல்வேறு உயிர்ச்சூழல்கள்

தாம் வாழும் நிலப்பரப்பைப் பண்டைத் தமிழர்கள் ஐவகை நிலங்களாகக் கண்டனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று அவற்றை அழைத்து வந்தனர். இந்த ஐவகைப் பரப்பை ஐவகை உயிர்ச்சூழல் என்று கொள்ளலாம்.

1. மலையும் மலைசார்ந்த நிலப்பரப்பும் குறிஞ்சி - குறிஞ்சியின் உயிர்ச்சூழல், மலையின் உயரத்துக்கேற்ப வெப்பநிலை குறைவாகவும், தூய்மையான காற்றும், இயற்கையின் எழில் கொஞ்சும் பசுமையும் பின்னிப் பிணைந்துள்ளதாகக் குறிஞ்சி நில உயிர்ச்சூழல் திகழும்.
2. காடும் காடுசார்ந்த நிலப்பரப்பும் முல்லை நில உயிர்ச்சூழலை நிலைநிறுத்தும். இங்கு மிதமான வெப்பமும், மண் மற்றும் அதனை மேவியுள்ள காற்றின் ஈரப்பதமும் நிலைத்து நிற்கும்.
3. வயலும் வ்யல் சார்ந்த நிலப்பகுதியில் மருதநில உயிர்ச்சூழல் விரவி நிற்கும். மக்களுக்குத் தேவையான உணவை விளைவிப்பது மருதநிலமேயாதலின், மருதநில உயிர்ச்சூழல் மனித இடர்ப்பாடுகளுக்கு அதிகமாக் இலக்காகிறது.
4. கடலும் கடல் சார்ந்த பகுதிகளிலும் நெய்தலின்

உயிர்ச்சூழல் நிலை பெற்றிருக்கும். உலகப்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதிகளுக்கும் சற்று அதிகமான பரப்பளவில் கடல்நீர் பரவியுள்ளது. நீர்வாழ் உயிரினங்களுக்குரிய, அகன்று விரிந்த ஆழியும் கூட மாசுபடும் அளவுக்கு மனிதனின் குறும்புத்தனம் அதிகரித்துவிட்டது என்பதைக் கண்டு சூழலியலாளர்கள் உள்ளம் குமுறுகின்றனர்.

5. மணலும் மணல் சார்ந்த நிலப்பரப்பும் பாலைநில உயிர்ச்சூழலுக்கு வழிவகுக்கிறது. 300 மி.மீட்டருக்குக் குறைவான மழையளவு, அதிகமான வெப்பம், வெப்ப மண்டலக் காடுகள் அழிக்கப்படுவது ஆகிய காரணங்களால் பாலைநிலச்சூழல் உருவெடுக்கிறது. நீர்வளத்தையும், நிலவளத்தையும் மனித இனம் அளவுக்கதிகமாகச் சுரண்டுவதால் பாலையின் பரப்பு உலகம் முழுவதும் விரிவடைந்துகொண்டே செல்கிறது.

இவ்வாறு இந்த உலகக்கோளில் பல்வேறு உயிர்ச்சூழல் அமைப்புகள் உருவாகி நிலைபெற்று, எண்ணற்ற உயிரினங்களின் வாழ்வுக்கு உறுதுணையாக விளங்குகின்றன. ஆயினும், அனைத்து உயிர்ச்சூழல் அமைப்புகளுக்கும் அரணாக விளங்குவது குறிஞ்சி நில உயிர்ச்சூழலும், முல்லை நில உயிர்ச்சூழலுமே என்று சொல்லலாம். இவ்விரண்டு அமைப்புகளும் ஒன்றையொன்று பின்னிப்பிணைந்து விளங்குவனவாம்.

## முல்லைநில உயிர்ச்சூழல் அமைப்பு

மரங்கள், தங்களுக்குத் தேவையான கரிமப்பொருட்களைக் காற்றிலுள்ள கரியமில வாயுவிலிருந்து பெறுகின்றன. நீரையும் தாதுப்பொருட்களையும் மண்ணிலிருந்து உறிஞ்சிக்கொள்கின்றன. அந்த உணவுப்பொருட்கள் பெரும்பாலும் இலைகளையே சார்கின்றன ஆண்டுதோறும்

இலைகள் உதிர்ந்து நிலத்தில் விழுந்து, மண்ணோடு சேர்ந்து மக்கி, மண்ணோடு மண்ணாகச் சேர்ந்து விடும். இதனால் காட்டிலுள்ள மண்வளம் மென்மேலும் அதிகரிக்கும். தாதுப்பொருள்களை மண் திரும்பவும் பெறுவதுடன் இலைகள் மக்குவதால் கிடைக்கும் அங்ககச் சத்துகளும், மண்ணுக்குக் கிடைக்கின்றன. கீழே விழுகின்ற இலைகளும் கிளைகளும் மண்ணின் மீது அழுகிப் பஞ்சை ஒத்த குணபச்சத்து படர்ந்து பெருகும். அவ்வாறு பெருகும் குணபம், மண்ணின் அடியிலும் பரவிச்சென்று நிறையும் நிலையில், அம்மண் வளமுடையதாக ஆகிறது.

இக்காரணம் பற்றியே காடுகளை அகற்றிப் புதிதாகச் சாகுபடி செய்யும் நிலங்களில் விளைச்சல் அதிகரிக்கின்றது. எனவே இடம் விட்டு இடம் பெயரும் நாடோடிக் கூட்டங்கள், காட்டின் ஒரு பகுதியில் சாகுபடியை மேற்கொள்வார்கள். அங்குள்ள மண்ணின் வளம் குறைந்த நிலையில் மறுபடியும் இடம் பெயர்வர். இவ்வாறு காட்டு நிலங்களில் அடிக்கடி இடம் மாற்றி மேற்கொள்ளும் சாகுபடி முறைக்கு 'குமரிச் சாகுபடி' என்று பெயர். காடுகளின் பேரழிவுக்கு இந்தச் சாகுபடி முறையே முதன்முதலில் வழிவகுத்தது.

சாகுபடி செய்யப்படுகின்ற திறந்தவெளி நிலத்திலுள்ள மண்ணைவிடக் காடுகளிலுள்ள மண், சொறசொறப்பாக இருக்கும். நீரை உறிஞ்சும். இதன் தன்மை, விளைநிலங்களிலுள்ள மண்ணைவிடக் கிட்டத்தட்ட 50மடங்கு அதிகமாக இருக்கும். காரணம், மரங்களின் வேர்கள் மண்ணுக்குள் எல்லாப்பக்கங்களிலும் பரவி ஊடுருவிச் செல்லும். செல்லுகின்ற இடங்களில் துளைகளும் சிறுவாய்க்கால்களும் இயல்பாகவே அமைந்துவிடுகின்றன. நுண்ணிய அந்த வாய்க்கால்கள் மூலமாக மழைநீர் மண்ணுக்குள் கசிந்து செல்கிறது. மேலும், காட்டு மண்ணிலுள்ள நுண்ணுயிர்கள், சிறிய பூச்சிகள்

முதலியவையும் மண்ணை இடையறாமல் புரட்டி எடுப்பதால், மென்மேலும் பொலபொலப்பாகி, மழைநீரை அந்த மண் உறிஞ்சி எடுத்துக்கொள்வது எளிதாகிறது.

மரங்கள் மண்ணுக்குள் குடையாகின்றன. அத்துடன் மண்ணின்மேல் விழுகின்ற இலைதழைகளும், மஞ்சம்போன்று குவிந்து பெருகியுள்ள மக்குகளும் மழைநீரைத் தாங்கிக் கொள்வதால், மழைநீர் மண்ணை அரித்துச் செல்வதற்குரிய வாய்ப்பே ஏற்படுவதில்லை.

மழைநீரைத் தேக்கிச் சேமிப்பதற்கு அதிகமாகப் பணம் செலவழித்து அணைக்கட்டுகள் கட்டுகிறோம். ஆனால் மழைநீர் புரண்டோடி வருகின்ற வடிமுகப் பகுதிகளில் நீர் வீணாகாதவாறு பாதுகாக்கவேண்டிய தேவையை நாம் உணர்வதில்லை. ஒவ்வொரு வடிமுகப் பகுதியிலும் மண்ணரிப்பைத் தடுப்பதற்கும், மழைநீர், வீணாக ஓடிக் கடலில் சென்று சேர்வதைத் தடுப்பதற்கும் மண்வளப் பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல் இன்றியமையாத் தேவையாகும்.

மலைப் பகுதிகளில் உள்ள காடுகளும் பயிரினங்களும் மழைநீரின் ஓட்டத்தை வரையறை செய்கின்றன. காலங்காலமாக மரங்களிலிருந்து நிலத்தில் விழுகின்ற இலைதழைகள் ஒவ்வொரு மரத்தினடியிலும் இரண்டடி, மூன்றடி உயரத்துக்குப் பஞ்சு மெத்தை போல் படிந்து கிடக்கும். காடுகளில் செறிவாக மரங்கள் இருக்குமாதலின், முல்லை நிலப்பரப்பு முழுவதும் இலைகளின் இந்தப் பஞ்சுமெத்தை பரவியிருக்கும். விழுகின்ற மழைநீரை இந்தப் பஞ்சுமெத்தை அப்படியே உறிஞ்சிக்கொள்ளும். உறிஞ்சப்பெறும் மழைநீரின் ஒருபகுதி நிலத்தின் கீழே செல்லும். இன்னொரு பகுதி மெல்ல மெல்லக் கசிந்து வெளியேறும் மழைக்காலம் முடிந்தபின்னரும் கூடப் பல மாதங்களுக்கு இந்த நீர்க்கசிவு இருந்துகொண்டிருக்கும் இந்த நிலையில், ஆறுகள் நதிகளில் ஆண்டு முழுவதும் நீரோட்டம் தொடரும்.

ஆக செறிவான மரங்கள் உள்ள காடுகள் இருக்கும் பகுதிகளில் நிலத்தடி நீர்வளமும் நிறைவாக இருக்கும். நீர்நிலைகளிலும் கிணறுகளிலும் நீர்மட்டம் குறையாது. இதற்கு மாறாக, பயிரினம் எதுவும் இல்லாத கட்டாந்தரையில், மழைக்காலத்தில் திடீர்வெள்ளப்பெருக்கு, மழையில்லாத காலத்தில் துளிநீர்கூடக் காணமுடியாத வறட்சிநிலை என்று, மாறிமாறி வந்து, உயிர்ச்சூழலை நிலைகுலையச் செய்துவிடும்.

ஆகவே, ஒவ்வொரு வடிமுகப் பகுதியில் மேட்டுப்பகுதிகளில் செறிவான காடுகள் நிலையாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். காடுகள் போதுமான அளவு நிலை பெற்றுள்ள எந்த ஒரு நிலப்பகுதியிலும், நீர்வளம் நிலவளத்துக்கு குறைவு வருவதில்லை.

## காடுகளுக்கும் மழைக்கும் உள்ள தொடர்பு:

காடுகள் அதிகமாக இருந்தால் அங்கு அதிகமான மழை பொழியும் என்று கூறப்படுவதில் உண்மை இருப்பதாகக் கொள்ளமுடியாது. நீர், ஆவியாக மாறி மேலே எழும்புகிறது. நீராவியுள்ள காற்றின்மீது குளிர்ந்த காற்று வீசி மழை பொழிதல் உண்டு. மழையை மூன்று பகுப்புகளாகக் காணலாம்.

1. புயற்காற்று மழை : குளிர்ச்சியான இடங்களிலும் வெப்பமுள்ள இடங்களிலும் பெய்யும்.
2. பருவமழை : பருவக்காற்றுகள் மலைகள் மீது மோதுவதால் பொழிகிறது.
3. நிலையற்ற மழை : ஒரு பகுதியில் வெப்ப மிகுதியால் நீராவி மேலே கிளம்பி, பின்னர் அந்தப் பகுதிகளிலேயே சடசடவென்று பெரும் சாரலாகச் சிறிதுநேரம் பெய்து நின்றுவிடும்.

ஆகவே, சில இடங்களில் ஓங்கி வளர்ந்துள்ள மரங்கள் மழைமேகங்களைக் குளிர்ச்சியுறச் செய்து, அந்தப் பகுதியில் மழை பொழியச் செய்கின்றன. இது நிலையற்ற தற்காலிக மழையே என்றுதான் சொல்ல வேண்டும். இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால், சில பகுதிகளில் அதிகமான நாட்களில் மழை பெய்வதற்குக் காடுகள் காரணமாகின்றன எனலாம். சிலநாட்களில் அதிகமழை என்று பெய்வதைவிட, அதிக நாட்களில் அதே அளவு மழை புன்செய் நிலச்சாகுபடிக்கு ஏற்றதாக அமையும்.

இதற்கு மென்மேலும் காடுகளை வளர்ப்பதும், நீர்வளம், மண்வளத்தைப் பாதுகாக்கும் திட்டப்பணிகள் முறையாக மேற்கொள்வதும் விரைந்து மேற்கொள்ள வேண்டிய அவசரப்பணிகளாகும்.

## காடுகள் வளர்ப்பில் தனிக்கவனம் தேவை:

தேசிய தரிசுநில மேம்பாட்டு வாரியம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏழை மக்களை மையமாகக் கொள்ளும் கொள்கைகள், அமைப்புகள் என்று செயலாக்க நடைமுறைகளில் நல்லதொரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. அரசே மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு மாறாக, மக்கள் தாமே தம்முடைய தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு ஏதுவான அமைப்புகளையும் வசதிகளையும் செய்து தருவது சிறப்பாகும். மரம் வளர்ப்போர் கூட்டுறவு அமைப்புகள் அமைத்துக் கொள்வதற்கு ஊக்கம் தரப்படுகிறது. அரசுத்துறையல்லாத பள்ளிகள், கல்வி நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் போன்ற, அடிமட்ட மக்களுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டுள்ள அமைப்புகளைத் தரிசுநில மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுத்திட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இமயத்தில் உள்ள ஒரு கிராமத்தில், பெண்களால் அமைக்கப்பட்ட "சிப்கோ இயக்கம்" அப்பகுதியின்

உயிர்ச்சூழலைப் பாதுகாக்கும் வழிமுறையாக மரங்கள் நட்டு வளர்த்தது. இதுபோன்ற விழிப்புணர்வு இயக்கங்கள் நாடெங்கும் உருவாக வேண்டும். விழிப்புணர்வுடன் கூடிய மக்களின் பங்களிப்போடு தரிசுநில மேம்பாட்டுப் பணிகளை அரசு முடுக்கிவிட்டால், நாட்டில் சுற்றுச் சூழல் சீரைமையும்; வறுமை நிலை குறைந்துவிடும்.

காடுகளை அழித்தல், விளைநிலம் பொட்டல் பூமியாதல், மண்ணரிப்பு, மாசுபடிதல் போன்ற சுற்றுச்சூழலைச் சீர்குலைக்கும் சிக்கல்கள் யாவும், திட்டவட்டமான அரசியல் தீர்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். திருட்டுத்தனமாக மரங்களை வெட்டுகின்ற சமூகக் கேடர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்கின்ற அரசியல் சூழல் உருவானது மிகமிக இன்றியமையாதது.

பொருளியல் அறிஞர் "சுமேச்சா" என்பார் தனது "சின்னஞ்சிறியதே அழகுடையது" என்ற புகழ்வாய்ந்த நூலில் குறிப்பிட்டுள்ள வரிகளை இத்தருணத்தில் நாம் நினைவுகூர்வது மிகவும் பொருத்தமுடையதாகும். அவர் கூறுகிறார்:

"ஆண்டவன் அவருடைய ஒவ்வொரு குழந்தைக்கும் ஏதாவது ஒன்றைக் கொடுத்துத்தான் உள்ளார். இந்தியாவைப் பொருத்தமட்டில், உலகில் வேறெங்கும் இல்லாத அளவில் பல்வேறு மரங்களை ஆக்கித்தந்துள்ளார். இந்திய தேசம் பெற்றெடுத்த தலைசிறந்த ஆசானாகிய புத்தபிரானே, ஒவ்வொருவரையும் ஒரு மரத்தை நட்டு வளர்க்கப் பணித்தார். இவ்வறிவுரையைச் செயலாற்றின வரை, தூய்மையான காற்று, தேவையான நீர், போதுமான நிழல், பெருமளவு உணவு மற்றும் தேவையான பிற பண்டங்களை இந்தியாவின் பரந்த வெளிகள் எங்கும் வளர்ந்திருந்த மரங்கள் தந்தன..

கொஞ்சம் கற்பனை செய்துபாருங்கள்... ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சிறுவரும், ஆண்டொன்றுக்கு ஒரு மரத்தை

நட்டுப் பாதுகாப்பதாக, ஒரு குறிக்கோளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ஓர் ஐந்தாண்டுகளுக்குள் 100 கோடி மரங்கள் தோன்றி... இவற்றின் மதிப்பை ஒரு சிறுதாளில் கணக்கிடுங்கள். நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களைவிட இது கூடுதலாக இருக்கும்.

எந்த ஓர் அன்னிய நாட்டு உதவியும் இல்லாமலேயே, சேமிப்பு முதலீடு என்ற பொருளியல் நடப்பு இன்றியே, உணவு, உடை, கட்டுமானப் பொருட்களை... நிழல்நீர் என்று வாழ்வுக்குத் தேவைப்படும் அனைத்துப் பொருட்களையும் பெற்றிடலாம். உலகில் பிறந்த ஒவ்வொருவரும் தத்தம் கைகளை மூலதனமாகக் கொண்டே இதனைச் செய்ய முற்பட்டால், வேலையில்லாத் திண்டாட்டம் தீர்ந்துவிடும். அதற்குப்பதில், பெருகிவரும் வேலைவாய்ப்புகளுக்கு ஆட்கள் கிடைப்பார்களா என்ற கவலை வந்துவிடும்".

பொருளியல் அறிஞர் சுமேச்சாவின் இந்தக் கருத்தைச் செயல்படுத்துகின்ற உறுதிப்பாட்டை இந்தியப் பேரரசும், மாநில அரசுகளும் உறுதியான முறையில் ஏற்றுச் செயல்திட்டங்களை வகுத்துக்கொண்டு, ஒவ்வொரு சிற்றூர்ப் புறத்திலும், ஒவ்வொரு வடிமுகப்பகுதியிலும் மரங்களை நட்டுவளர்க்கும் பணிகளை நிறைவேற்ற முன்வரவேண்டும்.

ஒவ்வொரு வடிமுகப்பகுதியிலும் உள்ள விளை நிலங்களையெல்லாம் நிலவளத்திற்குப் பாகுபடுத்திக்கொண்டு வளமிக்க நிலப்பகுதிகளில் உணவுப்பயிர்களைச் சாகுபடி செய்வது, வளமில்லா நிலங்களிலும், புறம்போக்கு நிலங்களிலும் மரங்களை வளர்ப்பது என்ற முறையை நடைமுறைப்படுத்திட அரசினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

கண்மாய்க்கரைகள், சாலையோரங்கள் வீடுகளின் முன்புறம்-பின்புறம், பொதுக் கட்டிட வளாகங்கள் என்று எங்கெல்லாம் மரங்களை நட்டுவளர்க்கின்ற வாய்ப்புள்ளதோ அங்கெல்லாம் மரங்களை நட்டுவளர்க்கலாம். பொதுமரங்களை

வெட்டி விற்பனை செய்து ஈட்டுகின்ற சமூகக் கேடர்களின் எண்ணிக்கை பெருகிவிட்டது. அவர்களைக் கடுமையாகத் தண்டிக்கும் வண்ணம் சட்டதிட்டங்கள் அமையவேண்டும். அதற்கேற்ப அரசியலமைப்பை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

காடுகளின் பெரும்பயன் குறித்து விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் நாற்றங்கால் வளர்க்கும் திட்டத்தைப் பரவலாக நாடெங்கும் செயல்படுத்தினால் அதன் விளைபயன் பல நன்மைகளைத் தருவதாக அமையும். பள்ளிச் சிறுவர்களே நாற்றங்கால்களுக்கு நீரூற்றி வளர்க்கவும் பொது இடங்களிலும் அவரவர் வீடுகளிலும் மரங்களை நட்டு வளர்க்கவும் வாய்ப்பு உருவாகும்போது, இளம்பருவத்தில் மரக்கன்றுகளை வளர்க்கும் சிறுவர்கள், அவர்கள் வளர்ந்து பெரியவர்களாக ஆன பின்னர் அவற்றை வெட்டுவதற்கு உடன்பட மாட்டார்கள். மற்றவர்கள் வெட்டுவதையும் அனுமதிக்க மாட்டார்கள். ஒவ்வொரு பள்ளியிலும் வளர்க்கப்படும் மரக்கன்றுகளை அந்தந்த ஊர்ப்பகுதிகளிலுள்ள வேளாண்மக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கலாம். இதனால் பள்ளிகளுக்கு ஓரளவு வருமானம் கிட்டும், ஊர்ப்பகுதிகளில் மரங்களின் எண்ணிக்கை பெருகும்.

ஊர்ப்புறங்களில் இவ்வாறு மரங்களின் எண்ணிக்கை பெருகும்போது அது மண்வளம், நீர்வளத்தைப் பெருக்கும். எரிபொருள் ஊர்மக்களுக்கு எளிதாகக் கிடைக்கும். ஒவ்வொரு ஊரிலும் இவ்வாறு பசுமைப் பரப்பு கூடுவதால் தட்பவெட்ப நிலைகளும் வளமான வாழ்வியற்சூழலுக்கு இசைவாக அமைந்துவிடும்.

வேம்பு போன்ற மரங்களின் மருத்துவக் குணம், சிற்றூர் மக்களின் உடல்நலத்தைப் போற்றிப் பாதுகாக்கும். மேலும், அருகிவிட்ட மருத்துவச் செடிகளை துளசி, முருங்கை, ஆவாரை தூதுவளை போன்றவற்றை ஒவ்வோர் ஊர்ப்பகுதிகளிலும்

பரவலாக வளர்க்கும் நடைமுறையையும் அரசு ஊக்குவிப்பது நலம் பயக்கும். பெரும்பாலான நோய்களை நாட்டுமருந்துகளே தீர்த்துவிடும். அறுவை மருத்துவத்துக்கு மட்டும் அலோபதி மருத்துவநிலையத்துக்குச் செல்ல வேண்டியிருக்கும்.

*பாலையாகக் கிடந்த மலைப்பகுதியைச் சோலையாக மாற்றிய மனிதன் - உயிரோட்டமுள்ள ஒரு பாத்திரப் படைப்பு*

உரோமப் பேரரசுக்கு ஆட்பட்டுப்போன ஆல்ப்ஸ் மலைப்பகுதி சீரழிந்து வெறும் பாலையாக மாறிவிட்டது. அந்த வறண்ட மலைப்பகுதியில் ஒரு மனிதன். தன் ஒரே மகனையும் மனைவியையும் இழந்துவிட்ட விரக்தியில், தன்னந்தனியாக முப்பது செம்மறியாடுகளையும் ஒரு நாயையுமே தன் உடைமையாக வைத்துக் கொண்டு, ஓர் அமைதிப்புரட்சியை நோக்கிவாழ முற்படுகின்றான். ஓச், பீச், புங்கம், பெர்க் என்ற மரங்களை இலட்சக்கணக்கில் நடுவதும், அவையாவும் முளைத்து, வளர்ந்து, மரங்களாவதைக் கண்டு மகிழ்வதுமே அவன் நிகழ்த்திய அமைதிப்புரட்சி. அவனுடைய பெயர் 'எல்சீர்டு பவ்வீர்'. இவன் தன்னுடைய 50 வயது முதல் 85வயது வரை, கிட்டத்தட்ட 35 ஆண்டுகள் வரை, மரவிதைகளையும், மரக்கன்றுகளையும் நட்டுக்கொண்டே இருந்தான். பாலையாக இருந்த அந்த மலைப்பகுதி, அவன் இறக்கும்போது மரங்கள் செறிந்த வனப்பகுதியாக மாறிவிட்டது. வறண்டு கிடந்த ஓடைகளில் நீரோட்டம், ஆங்காங்கு நீர்வீழ்ச்சி, குளிர்ந்த காற்று என்று சுற்றுலாத்தலமாகவும் ஆகிவிட்டது.

என்ன கைம்மாறு கருதி இந்த அருஞ்சாதனையை அந்தத் தனி மனிதன் ஆற்றினான்? 'கைம்மாறு வேண்டா கடப்பாடு' என்று வள்ளுவர் இதற்கு விளக்கமளிப்பார். 'மாரிமாட்டு என் ஆற்றுங்கொல்லோ உலகு?' என்றும் அவர் வினா எழுப்புவார்.

பவ்வீர் என்ற இப்பாத்திரப்படைப்பை, உலகப்புகழ்பெற்ற பிரெஞ்ச் எழுத்தாளர் 'ஜீயன் ஜியோனோ' என்பார் தன்னுடைய “மரங்களை நட்டிய மனிதன்” என்ற சின்னஞ்சிறிய நூலில் கவிதை நயத்தோடு, உண்மைக் கதையொன்றைச் சொல்வது போல் எழுதியுள்ளார்.

இந்த நூல் அமெரிக்காவில் வெளியிடப்பட்டு 12 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இழந்த காடுகளை மீட்கும் வண்ணம், பரந்த அளவில் காடுகளை வளர்ப்பதற்கு இந்தச் சிறிய நூல் மக்களைத் தூண்டி ஆற்றுப்படுத்தியுள்ளது.

## முடிப்புரை

பெருமளவில் இழந்துவிட்ட காடுகளின் பரப்பை மீட்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து, முல்லைநில உயிர்ச்சூழலைப் புதுப்பிக்க வேண்டும். ஜீயன் ஜியோனோ போன்ற இயற்கை நேயர்களாகவுள்ள எழுத்தாளர்கள் முல்லை நில உயிர்ச்சூழல் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே வளர்க்கும் வண்ணம், கவிதைகள், புதினங்கள், கட்டுரைகள் என்று நூல்கள் எழுதி வெளியிடவேண்டும்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பல, காடுவளர்ப்பையே முக்கியப் பணிகளாகக் கொண்டு நாடெங்கும் உருவாகிவருகின்றன. இவற்றுக்கு அரசும் அரசு நிறுவனங்களும் ஊக்கமும் ஆக்கமும் சேர்க்க முன்வரலாம்.

*மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்*

*காடும் உடையது அரண்.*

என்பார் வள்ளுவர். தெள்ளிய நீரும் வளங்குன்றா விளைநிலமும், நிமிர்ந்து நிற்கும் குறிஞ்சியும், பொலிவு குன்றாத முல்லையும் ஆகிய இவையே ஒரு நாட்டின் வளமைக்குப் பாதுகாப்பு என்பது வள்ளுவரின் வாழ்வியல் மொழியாகும்.

## துணை நூற்பட்டியல்


1. Watershed Development with special Reference to Soil and Water Conservation.

   - Food and Agricultural Organisation

   - FAO Rome, 1977

2. மண்வளப் பாதுகாப்பு, எஸ்.மீனாட்சி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்., சென்னை.

3. சூழலியல்-பூவுலகின் நண்பர்கள், சவுத் ஆசியன் புக்ஸ், சென்னை - 2.

4. Economics of Waste Land Development, Edited by Malcom S. Adiseshiah - Lancer, New Delhi.

5. மரம், வளம், பிளஸ் மணி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 98.

6. "களஞ்சியம்" வளர்தமிழ் மன்றம் வெளியீடு, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை - 25. அக்டோபர் 1995.

7. Environment, Nursery of Life-Anjali Mookerjee, Publications Division . Ministry of Information and Broadcasting, Government of India.

8. The man who planted Trees. - Jean Giono - Chelsea Publishing Company - Chelsea, Vermont - 05038.

# மோஹன் ராகேஷ்

-பேரறிஞர் **ப. பழனியம்மாள்.**

இந்திய இலக்கியச் சிற்பிகளுள் சிறப்பிடம்பெற்ற மோஹன் ராகேஷ் 1925ஆம் ஆண்டு அமிருதசரசில் பிறந்தவர். கதையாசிரியர், நாவலாசிரியர், நாடக ஆசிரியர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், சிந்தனையாளர். தேசீய அளவில் இவருக்குப் புகழ் தேடித்தந்த 'ஆஷாட் கா ஏக்தீன் (ஆடி மாதத்தில் ஒருநாள்) 'ஆதே அதூரே' (அரையும் குறையும்) ஆகிய நாடகங்களில் அம்பிகா, சாவித்திரி, என்ற பாத்திரங்களில் நடித்த டாக்டர் பிரதிபா அகர்வால் என்பவர் ராகேஷ் அவர்களுடன் ஏறக்குறைய பன்னிரெண்டு ஆண்டுகள் சந்தித்துப் பழகியவர். முப்பது ஆண்டுகளாக இந்தி நாடகங்களோடு தொடர்புடையவர். இவர் ராகேஷின் வாழ்க்கை வரலாற்றையும், படைப்புகளின் பெருமையையும் ஆராய்ந்து எழுதியிருப்பது நூலின் தரத்திற்கு உரைகல் எனலாம். இந்தி மொழியில் எழுதப் பெற்ற இந்நூலை வானொலி, தொலைக்காட்சி நிலையங்களில் பணியாற்றிய அகிலா சிவராமன் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்திருப்பது பொன்மலர் வாசங்கமழ்வதை ஒக்கும். டாக்டர் பிரதிபா அகர்வால் இந்நூலை,

1. மனிதரும் அவரது மாண்பும்
2. படைப்புகளும் அவற்றின் பெருமையும்

என இரு இயல்களாகப் பாகுபடுத்தி ஆராய்ந்துள்ளார். முதல் இயலில் ராகேஷ் அவர்களின் நாட்குறிப்பும், கட்டுரைகளும், அவரது மனைவி அனிதா எழுதிய சந்த்ரத்ரேன் ஔர், அவருடைய நண்பர் கமலேஷ்வர் எழுதிய 'மேரா ஹம் தம் மேரா தோஸ்த்' என்ற கட்டுரையும் அடிப்படைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தகு உண்மைக் குறிப்புகளையொட்டி,

"பத்தொன்பது வயதிலேயே சிறுவன் ராகேஷ் புரட்சி மனப்பான்மை கொண்டவனாக மாறிவிட்டான். எதிலும்

நிலையில்லாத சஞ்சலம், எதிலும் அதிகப்படியான ஈடுபாடு, மிகுந்த ஆவேசம் இவை ராகேஷின் குணங்களாகப் படிந்து விட்டன" என்று ராகேஷின் இளமைக்கால உணர்வுகள் புலப்படுத்தப்பட்டுள்ளன.

"இந்தியிலும் ஆங்கிலத்திலும் எம்.ஏ. படித்த ராகேஷ் கல்லூரி விரிவுரையாளராகப் பணியாற்றியவர். வாழ்வில் துடிப்புடன், நம்பிக்கையுடன் அளவற்ற உறுதியுடன் தனக்கென்று கொள்கையுடன், தாராளமான குணத்துடன் சமயத்தில் சுயநலம் கொண்டவராக ராயல்டி போன்ற செயல்களில் யாருக்கும் வளைந்து கொடுக்காதவராக, சிறந்த ஆட்சித்திறன் படைத்தவராக விடுதலை வேட்கை கொண்டவராக - பல முரண்பாடுகளின் ஒன்று திரண்ட வடிவமாக வாழ்ந்த மோஹன் ராகேஷ் இறந்த பொழுது அவருக்கு வயது 48 நிறைந்திருக்கவில்லை (பக்49) என்ற அனுதாப உணர்வுகளில் ராகேஷின் இறுதிக்காலக் குணநலன்களை வெளிப்படுத்தியிருப்பது நூலாசிரியரின் ஆய்வுத்திறனுக்கு அளவுகோலாகிறது.

'படைப்புகளும் அவற்றின் பெருமையும்' என்னும் இரண்டாவது இயலில் ராகேஷ் எழுதிய கதைகள், புதினங்கள், நாடகங்கள் ஆகியன பற்றி ஆய்ந்துணர்த்தப்பட்டுள்ளன. 1944ஆம் ஆண்டு ராகேஷ் தனது பத்தொன்பதாம் வயதில் முதன்முதலாக எழுதிய நன்ஹி (சிறியது) என்ற கதை ஸாசிகா என்ற பத்திரிகையில் வெளிவந்தது. தொடர்ந்து அவர் எழுதிய கதைகள் யாவும் கதைப்பொருளின் அடிப்படையில் ஐந்து தொகுதிகளாகத் தொகுத்து வெளியிடப்பட்டன. இக்கதைகளை ஆராய்ந்த ஆய்வாளர் பெண் என்பதால்.

'அவர்தம் கதைகள் ஆண்பெண் உறவு பற்றியே அமைந்துள்ளன. இருபதாம் நூற்றாண்டில் ஆண்பெண் உறவில் ஒரு புதிய மலர்ச்சி தோன்றியது. பெண் சுதந்திரமாக வெளி அலுவல்களில் ஈடுபட்டாள். விலை கொடுத்துத் திருமண உறவுகளை ஏற்படுத்தும் மனோபாவத்தில் மாறுபாடு ஏற்பட்டது என்ற பெண்ணியச் சிந்தனைகளும் இடம் பெற்றுள்ளன.'

ராகேஷ் மூன்று நெடுங்கதைகளை எழுதினார். சிறுகதைகளைப் போலவே இந்த நெடுங்கதைகளின் கருவும் ஆண்பெண் உறவின் எல்லைகளேயாம். ஆனால், "ராகேஷின் நாவல்களை முதல்தரப் படைப்புகள் - என்ற வரிசையில் சேர்க்க முடியாது. அவரது கதைகள், நாடகங்கள், நாவல்கள், கட்டுரைகள் இன்ன பிறவற்றோடு எண்ணும்போது நாவல்கள் கடைசி இடத்தையே பெறும்" என்று தன்னுடைய விருப்பு வெறுப்பற்ற ஆய்வுச் சிந்தனையை நூலாசிரியர் நிலைநாட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ராகேஷ் எழுதிய முதல் நாடகத்திற்கே சங்கீத நாடக அகாதெமியில் முதல் விருது கிடைத்தது. தொடர்ந்து மூன்று நாடகங்கள் எழுதினார். இவையே அவரை அனைத்து இந்திய மொழி இலக்கியத்திலும் இடம்பெறச்செய்தன.

இந்த மூன்று நாடகங்களையும் தனித்தனியே ஆராய்ந்த ஆசிரியர் தன் ஆய்வின் முடிவாக அவரது நாடகங்கள் இலக்கியமுமாயின, மேடை நாடகங்களுமாயின, கதை வசனம், காட்சி அமைப்பு, உரையாடல், மொழி, அரங்க அமைப்பு முதலிய எல்லா அம்சங்களிலும் ராகேஷின் படைப்புகள் உயர்ந்த இடம் வகிக்கின்றன. (ப. 102) என்று கூறி மேலும் பெருமை சேர்த்துள்ளார். இது நாடகம் பற்றிய ஆய்வுநூலின் மணி மகுடமாகத் திகழ்கிறது.

நூலின் இறுதியில் இடம்பெற்றுள்ள குழந்தை நூல்கள், நாட்குறிப்பு, பயண நினைவுகள், மொழிபெயர்ப்புகள் ஆகியன பற்றிய ஆய்வு ராகேஷின் உயர்ந்த இடத்தை அலங்கரிக்கின்றது. இந்நூலைப் படித்து முடித்த பின்பு ராகேஷின் வாழ்க்கை வரலாற்று நினைவுகள் இலக்கிய ஆர்வலர்களின் அடிமனதின் ஆழத்தில் நீங்காது நிழலிட்டுக்கொண்டே இருக்கும் என்பது ஐயமில்லை. 1999இல் சாகித்திய அகாதெமி வெளியிட்ட 112 பக்கங்களை உடைய இந்நூலின் விலை ரூ.25.

# இலக்கணக் கொள்கைகளும் தெ.பொ.மீயின் பார்வையும்

- பேரறிஞர் செ.வை.சண்முகம்

*(முன்னிதழ்த் தொடர்ச்சி)*

மொழி அமைப்பு நோக்கில் தொல்காப்பியத்தில் குறிப்பிட்ட பல மெய்மயக்கங்கள் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. அதற்கு உரையாசிரியர்கள் இரண்டு விதமாக விடை அளித்துள்ளார்கள். எழுத்ததிகாரக் களன் பற்றிய கோட்பாட்டுப் பிரச்சினையாக 1. தனிமொழியில் வருமா? தொடர் மொழியில் வருமா என்பது 2. பிற்காலத்தில் மறைந்துவிட்டது. என்பது இன்று உரையாசிரியர்களின் மாறுபட்ட இலக்கணக் கோட்பாடுகளாகக் கருதி மெய்மயக்கம் பற்றிய விமர்சனம் புறக்கணிக்கப்பட்டுவருகிறது. தொல்காப்பியர் கூறிய எல்லா மெய்மயக்கங்களுக்கும் உதாரணங்கள் காட்ட வேண்டி, அவை தொடர் மொழியில் வரும் என்று கொண்டாலும் ஞ்த் (உரிஞ் தீது), ல்த் (வேல், தீது), ல்ம் (வேல் மாண்டது) -ள்த்- *(வேள் தீது) போன்ற மெய்மயக்கங்களைத் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை என்ற குற்றம் வரும். இலக்கணக் கோட்பாட்டு நோக்கில் தனி மொழியில் வரும் மெய்மயக்கங்களே சிறப்பாகக் கொள்ளப்படும். நச்சினார்க்கினியரின் கருத்தும் அதுவே. பல மெய்மயக்கங்களுக்கு உதாரணம் காணப்படாததற்கு இலக்கண உருவாக்கக் கோட்பாடே காரணம். அதுதான் இலக்கண ஆசிரியரின் காட்சி நிறைவை விட (Observational adequacy) மொழியில் வந்ததைப் பட்டியல் இடுவதை விட இலக்கணப் பொதுமைக்கும் எளிமைக்கும் இடம் கொடுப்பான். அதை விளக்க நிறைவு (Descriptiive adequacy) என்பார்கள் மொழியியலாளர்கள். அதன்மூலம் மிகைபடக் கூறல் மீப்பொதுமைப் படுத்தல் (Over generalisation) என்ற குற்றம் ஏற்படும் என்றாலும் இலக்கணத்தில் பொதுமையும் எளிமையும் ஏற்படுவது ஒரு நன்மையாகக் கருதப்படும். மேலும் அப்படிச்

செய்யப்பட்ட சில வழக்குகள் பிற்காலத்தில் மொழியில் காணப்படும். உதாரணமாகத் தொல்காப்பியர் குறிப்பிட்ட -ங்ங்- என்ற உடனிலை மெய்மயக்கம் குறள், சிலம்பு, மேகலை, ஆகிய நூல்களிலேயே வந்துள்ளது. வேறு சில மெய்மயக்கங்களால் இலக்கண வருணனை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது (சண்முகம் 1981. 99,151).

இங்கு இன்னொரு உண்மையும் சுட்டிக்காட்டத் தகுந்தது. சங்கப் புலவர்களும், பிற்காலப் புலவர்களும், இலக்கண ஆசிரியர்களும் சொல்லுக்கு முதலில் வராது என்ற எழுத்துக்களில் தொல்காப்பிய விதியைப் புறக்கணித்தவர்கள் மெய்மயக்கத்தில் அவர் சொன்ன மெய்மயக்கங்கள் பலவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. (வ்ய், ர்ய் போன்றவைகளை விய, ரிய என்று மாற்றிக்கொண்டார்கள்). அதாவது வரக்கூடாது என்ற விதியை வரலாம் (சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்கள் பற்றியது) என்றும் வரலாம் என்ற விதியை வரக்கூடாது என்றும் இரண்டு நிலையில் தொல்காப்பிய விதிகள் பிற்காலத்தில் புறக்கணிக்கப்பட்டன. தொல்காப்பியக் கல்வி நோக்கில் இது ஆராயப்பட வேண்டிய ஒன்று.

தொல்காப்பியத்தில் விளக்க நிறைவுக் கோட்பாட்டைச் சொல்லதிகாரத்தில் விரவுப் பெயர்கள் வருணனையிலும் (சண்முகம், 1984 160தொ) பொருளதிகாரத்தில் புறத்திணைகள் இணையான அகத்திணை வருணனைகளிலும் (சண்முகம், 1989 174) க ணலாம்.

## 3.2 இலக்கண மொழியியல் கோட்பாடு

தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாட்டு ஆய்வில் அவருடைய உரிச்சொல் (1974ஆ) என்ற கட்டுரை முக்கிய இடம்பெறும். அதன்படி உரிச்சொல் என்பது அடிச்சொல் என்பது பொருத்தமானதே. ஆனால் அதன் சொல்வகைப்பாடு (Parts of speech) விவாதத்துக்கு உரியது. இது முன்னரே விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. (சண்முகம் 1984, 163-72). பிரயோக விவேகம் முதலிய வடமொழி மரபை

ஒட்டிய இலக்கணங்களில் காணப்படும் மொழியியல் கோட்பாட்டை ஆங்காங்கே (1974அ) விளக்கியுள்ளார்.

### 3:3 இலக்கண உருவாக்கம்

தொல்காப்பியரின் காலச்சூழல், இலக்கண விதிகளின் தோற்றம் ஆகியவை பற்றித் தெ.பொ.மீ கூறியவை இன்று பேசப்படுகிற இலக்கணச் சமூகவியலுக்கு (Sociology of Grammar) அடிநாதமாக அமைந்துள்ளன.

தொல்காப்பியரின் காலச்சூழலைப் பலரும் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. தெ.பொ.மீ.வரலாற்று உணர்வு அடிப்படையில் காலச்சூழலையும் இலக்கண உருவாக்கத்திற்கு ஒரு காரணியாகக் குறிப்பிட்டுள்ளார்.

Though Tolkappiyam is the most ancient Tamil work, it must have come into existence after Sanskrit words and northern influence had penerated into the language and culture of the Tamils, that is, after the Tamilians had come into contact with and the developed the international eastern culture of the ancient word with Sanskrit, the *lingua france* of the East' (1981: 32)

(அதாவது தொல்காப்பியம் தமிழில் மிகப்பழைய நூலாக இருந்தாலும் அது வடமொழிச் சொற்களும் வடக்கத்திய செல்வாக்கும் தமிழ் மொழியிலும் பண்பாட்டிலும் புகுந்த பிறகே தொல்காப்பியம் இயற்றப்பட்டிருக்க வேண்டும். தமிழர்கள் அனைத்துலக கீழை நாட்டுப் பொது மொழியான வடமொழியோடும் பண்பாட்டோடும் தொடர்பு ஏற்பட்டு வளர்ந்த பிறகே அது நடந்திருக்கவேண்டும். 13 ஆண்டகளுக்குப்பிறகும்

(... there can be no two opinions about Tolkappiyar following this pan-Indian school... in following the Pan-Indian School, he does not do violence to the genuine of the Tamil Language 1974 அ:17).

(அனைத்திந்திய இலக்கண மரபை அறிந்து பின்பற்றியவர்... அப்படிப் பின்பற்றினாலும் தமிழ்மொழி மரபின் உயிர்ப்புக்குக் குந்தகம் விளைவிக்காதவர்) என்ற கருத்தைத் தெளிவாகக் கூறியது இலக்கண உருவாக்கம் பற்றிய சிந்தனையின் அடிநாதம். அதாவது ஒரு மொழியில் இலக்கணம் பற்றிய சிந்தனை முதன்முதலில் பிற மொழியோடும் தாய்மொழியின் பழைய இலக்கிய மொழியோடும் உள்ள மாறுபாட்டை (Contractive Consciousness) உணர்ந்தபிறகே தோன்றும் என்ற உலகளாவிய சிந்தனை பிரதிபலிக்கிறது. மேலும்சில சிந்தனைகளை அது தோற்றுவித்துள்ளது. (சண்முகம், 1989. 176-81) பார்க்கவும்). தெ.பொ.மீயின் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறவேண்டுமானால் அவர் தமிழ் மொழி முதல் வாதம் என்ற கருத்தையும் ஒத்துக்கொள்பவர் அல்ல. அதே சமயத்தில் வடமொழி முதல் வாதக் கருத்தையும் ஒத்துக்கொள்பவர் அல்லர் என்று சொல்லலாம்.

மொழியியல் அறிஞர் என்ற முறையில் இலக் கணத்தின் பண்பை தெ.பொ.மீ நன்கு வற்புறுத்தியுள்ளார்.

தொல்காப்பியம் ஒரு விளக்கமுறை இலக்கணம், வரலாற்று இலக்கணம் அல்ல. அதில் உலகப் பொதுமறையும் காணப்படுகிறது. (1961 115). இதற்கும் மேலாக இலக்கண விதிகள் அந்த மொழிச் சமூகத்திலிருந்து பெறப்படுகின்றன என்ற கருத்தை

Every rule or Grammar is social in origin. demanded by the exigencies of time and usage (1961-117)

என்ற அவருடைய வாசகம் இலக்கண விதிகளின் அல்லது இலக்கணங்களின் சமூக இயக்கப் பண்பைத் தொலைநோக்கோடு தெளிவுபடுத்துகிறது. அது இலக்கணக் கல்விக்குப் பயன்படுவதையும் (Teaching of Tamil Grammar) என்ற கட்டுரையில் அழகாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார். அதன் தாக்கத்தால் இன்று தமிழிலும் இலக்கணச் சமூகவியல் பற்றிப் பேசப்படுவதைக் காணமுடிகிறது. (சண்முகம் 1994).

## 4. முடிவுரை

அறிஞர்களும் காலத்தைப் பிரபலித்தும் (ஒட்டியும்) காலத்தால் உருவாக்கப்பட்டும் (வெட்டியும்) உருப்பெறுகிறார்கள்.

அவருடைய ஆய்வைப் பொறுத்தவரையில், மூன்று சங்கம் பற்றிய ஓரளவு நம்பிக்கை, அகத்தியர் சங்க காலத்தில் இருந்திருக்காவிட்டாலும் பிற்காலத்தில் வாழ்ந்திருக்கவேண்டும் என்ற எண்ணம் அவருடைய காலத்தை ஒட்டியவை.

பல தமிழ் நூல்களுக்கு வடமொழி மூலம் கற்பிக்கப்பட்டதைத் தன்னுடைய ஆய்வால் தமிழ்மூலம் நிரூபித்தது அவருடைய காலத்தை வெட்டியவை. அவருக்குப் புகழைத் தேடித்தந்தவை. பல பட்டங்களையும் பெற்றுத் தந்தவை. அனால் இலக்கணப் பண்பு இலக்கணம், உருவாக்கம் பற்றியவை புதியவை. இன்றும் முழுவதுமான ஏற்றுக் கொள்ளப்படாதவை. தனிப்பட்ட மனிதர்கள் இழிவுப் பட்டம் கூடச் சூட்டிப் பரப்பினார்கள். ஆனால் அவர் அவைகளைப் பற்றி எல்லாம் கவலைப்படவில்லை. தன் மனதுக்கு அறிவுக்குச் சரி என்று பட்டதைத் தைரியமாகவே சொல்லிவந்தார். தமிழ் உலகில் மொழி உணர்வு அதிகமாக ஆட்சி செய்த காலத்தில் அறிவு வழிப்பட்ட விஞ்ஞான ரீதியான கருத்துகள் பரப்புவதற்குப் பாடுபட்டார்.

இந்தக் கட்டுரை மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையினர் பிப்.22,23, 1999 ஆகிய நாட்களில் நடத்திய "பல்கலைச் செல்வர் தமிழாய்வுப் பணி" என்ற கருத்தரங்கில் படிக்கப்பட்டது.

## துணையன்கள்


**சண்முகம் செ.வை.**

1967. Naccinarkkiniyar's Conception of Phonolgy அண்ணாமலைநகர்.

1980 அ. எழுத்திலக்கணக் கோட்பாடு, அ.நகர்.

1980 ஆ. வீரசோழியம். ஒரு மொழியியல் ஆய்வு மொழியியல் 4. (பேரா.தெபொமீ. சிறப்பு மலர். ப. 425-88).

1984. சொல்லிலக்கணக் கோட்பாடு - 1. அ.நகர்

1986. சொல்லிலக்கணக் கோட்பாடு - 2. அ.நகர்.

1989. மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும் (சங்ககாலம்), சென்னை.

1994. இலக்கண உருவாக்கம் (பல்லவர் - பாண்டியர் காலம்), சென்னை.

**சுப்பிரமணியன், ச.வே.**

1998. தொல்காப்பியம். தெளிவுரை, சென்னை

**பாலசுப்பிரமணியன், க.**

1983. Homogenity and intergrity of Tolkappiyam and its authorship' IJDL. XII 429-41.

**மீனாட்சிசுந்தரன், தெ.பொ.**

1961. Collected Papers of Prof.T.P.Meenakshisundaran Prof.TPMeenakshisundaran Sixty - First Birth Commemoration Volume, Annamalianagar,

1965. A History of Tamil Language, Poona.

1974 அ. Foreign Models in Tamil Grammar, Trivandrum.

1974 ஆ. 'உரிச்சொல்' இலக்கண ஆய்வுக்கட்டுரைகள்-1 (பதிப்பர்கள், அகத்தியலிங்கம் ச. பாலசுப்பிரமணியன், க.). ப.121-38 அ.நகர்

Hymes D.(Ed.)1974 Studies in the History of Linguistics. Tradition and Paradigm, Bloomington.

# உன்னத உடல் நலம் தரும் உயர்வான வாழ்வு தரும்

## உடல் நலப் பரிசோதனைத் திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்றுநோய்ப் பரிசோதனை
- மதுப்பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழுப் பரிசோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உட்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்.

ஆசிரியர்களுக்கும். மாணவர்களுக்கும் மருத்துவமனைக்
கட்டணத்தில் 20 சதவீதம் சலுகை வழங்கப்படும்

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்குத் தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை நேரம் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை

## மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்

# மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை–625 107. போன் : 588741–56
Fax : 586353 E-mail : mmhrc@md2.vsnl.net.in



அன்பு அச்சகம், மதுரை – 1. ✆ 741116